**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 53/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–5 |
| Name | : | சுரேஷ்விஷ்வநாத், வயது 40 |
| Father Name/Husband Name | : | செந்தில்குமார் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை II |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of December 2023.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கோவில்பட்டியில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை II ஆக பணியில் உள்ளேன். கடந்த 21.09.2022 ஆம் தேதி நாலாட்டின்புதூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் நிலைய குற்ற எண்.181/2022 வழக்கில் சம்பந்தப்பட்ட வானங்கள் TN 21 K 8481 என்ற இருச்சக்கர வாகனம் மற்றும் TN 96 C 9151 என்ற போலிரோ கார் ஆகிய ஆவணங்களை ஆய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்.
2. மேற்படி வாகனங்களை எனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். TN 21 K 8481 என்ற இருச்சக்கர வாகனத்திற்கு பதிவு சான்று, காப்பீடு சான்று, ஓட்டுநர் உரிமம் ஆகியவை ஆய்வின் போது காண்பிக்கவில்லை. அதனால் வாகனம் சிறைப்பிடிக்கப்பட்டு காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வாகனத்தில் முன்பக்க சக்கரம், போர்க், ஹேண்டில் பார், முகப்புவிளக்கு அசம்பிளி ஆகியவை சேதம் அடைந்து காணப்பட்டது.
3. மேற்படி வாகனத்தின் இயந்திர கோளாரால் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். ( **நான் மேற்படி வாகனத்திற்கு அளித்த சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
4. TN 96 C 9151 என்ற போலிரோ காரை ஆய்வு செய்த போது ஆவணங்கள் கொடுக்கப்பட்டன, மேற்படி வாகனத்தின் முன்பக்க காற்றுத்தடை கண்ணாடி, வலது பக்க முகப்பு விளக்கு மற்றும் சைகை விளக்கு மற்றும் முன்பக்க பம்பர் கிரில், முன்பக்கம் உள்ள வலது பக்க பாடியில் சேதம் காணப்பட்டது.
5. மேற்படி வாகனத்தின் இயந்திர கோளாரால் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். (**நான் மேற்படி வாகனத்திற்கு அளித்த சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் ஆய்வு செய்யும் போது உங்கள் அலுவலகத்திலும் ஆய்வு செய்ததற்கான ஒரு நகல் வைத்திருப்பீர்கள் என்றால் சரிதான். நீங்கள் குறிப்பிட்டுள்ள இருச்சக்கர வாகனத்தின் பதிவு சான்று உங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் இருக்கும். வேறு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் இருக்காது.
2. வேறு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவற்றை பெற்று பரிசீலனை செய்ய வேண்டியது உங்கள் கடமை என்றால் கடமை எதுவும் இல்லை. இருச்சக்கர வாகனத்தின் பதிவு சான்றுதழில் ஊர்ஜிததில் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. பதிவு சான்றுதழ் ஊர்ஜிததில் இல்லாத வாகனம் சாலையில் பயணிக்க கூடாது என்றால் சரிதான்.
3. பதிவு சான்று, காப்புச்சான்று, ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஒரு வாகனம் சாலையில் பயணித்தால் அதனை தடுக்க கூடிய கடமை யாருடையது என்றால் எங்களுக்கும் போலிசாருக்கும் உள்ளது. நீங்கள் சம்பவ இடத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.
4. இரண்டு வாகனங்களின் அடைந்துள்ள சேதத்தை வைத்து இருச்சக்கர வாகனம் தான் அதிவேகமாக வந்து விபத்து ஏற்படுள்ளது என்றால் அப்படி சொல்ல முடியாது. இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் வேகமாக வந்ததால் தான் இருச்சக்கர வாகனத்திற்கு அவ்வளவு சேதம் ஏற்படுள்ளது என்றால் சரியல்ல.
5. இருச்சக்கர வாகனத்தில் வந்த நபருக்கு உரிமம் இல்லாமல் சாலையில் வேகமாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. உங்களிடம் ஆஜர் படுத்தப்பட்ட விபத்து வாகனங்களை பத்து நிமிடத்தில் ஆய்வு செய்து என்ன சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் அவ்வாறு சொல்ல முடியாது வாகனங்களில் ஏற்பட்டுள்ள சேதங்கள் அடிப்படையில் தான் சொல்ல முடியும்.
6. நீங்கள் சரிவர ஆய்வு செய்யாமல் அறிக்கை அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.